DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC.214/2020
**Depositions of PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name | கனி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th Day of August 2025

**19.09.2025**
எதிரி ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் சிவகாசி, போஸ்காலனியில் குடியிருந்து வருகிறேன். அச்சு அலுவலகத்தில் பிரின்டராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.–1 ராஜா என்பவரை தெரியும். விபத்தில் இறந்துபோன பால்பாண்டியை எனக்கு தெரியும். கடந்த 04–01–2020 ஆம் தேதி இருக்கண்குடிக்கு பாதயாத்திரையாக நான், மணிகண்டன், பால்பாண்டி ஆகியோர் நடந்து சென்றோம். அன்று இரவு சுமார் 9.50 மணிக்கு நாரணாபுரம் செல்லும் சாலையில் உள்ள செவன்த்டே பள்ளிக்கு அருகில் சாலையின் இடது புறமாக சென்றுகொண்டிருந்தோம். அப்போது பால்பாண்டிக்கு வலது புறம் நானும், இடது புறம் மணிகண்டனும் நடந்து சென்றோம். அப்போது எங்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் ஒலி எழுப்பாமல் வந்து, எங்களுடன் நடுவில் வந்த பால்பாண்டி மீது மோதிவிபத்து ஏற்படுத்தியது. பால்பாண்டியின் காதிலிருந்து இரத்தம் வந்தது. பால்பாண்டிக்கு இடதுபுறம் வந்த மணிகண்டன் மட்டும் சரிந்து நின்று கொண்டார். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் வலது பக்கம் உள்ள

பள்ளத்தில் விழுந்துவிட்டார். அதனால் அவரை நான் பார்க்கவில்லை. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள பள்ளிக்கு பக்கத்தில் வரதராஜன் என்பவர் சில நபர்களுடன் உட்கார்ந்திருந்தார். அடிபட்ட பால்பாண்டியை வரதராஜனின் உதவியுடன் ஒரு ஆட்டோவில் ஏற்றி சுப்புராஜ் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எங்களுக்கு பின்னால் பால்பாண்டியின் அண்ணன் ராஜாவும் வந்தார். அங்கு பார்க்கமுடியாது என்று சொன்னதால் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பால்பாண்டியை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். விபத்து சம்மந்தமாக பால்பாண்டியன் அண்ணன் ராஜா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரம் கூறினேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை